ஸ்ரீ:

# ஸ்ரீ ஆண்டாள் வைபவம்.

(திருக்குடந்தை ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்வாமிகள் உபன்யாஸத்திலிருந்து –
தொகுத்தளித்தவர்: ஆடூர் - ஆஸூரி - மாதவாச்சார்யன், ஸ்ரீரங்கம்)



ஆடி மாதத்தின் சிறப்பு சொலப்புகில் அமுதம் சுரக்கும். பூமிப் பிராட்டியார், விஷ்ணு சித்தன் தூய திருமகளாய் அவதரித்தது இம்மாதத்திலேயே. ஸ்ரீவில்லிப்புத்தூர் தெற்கேயுள்ள திருப்பதி. பூமியிலுள்ளவர்களனைவர்களுடையவும் புண்யபலன் ஸ்ரீ ஆண்டாள் அவதாரம். ஸ்ரீஆண்டாள் அவதாரத்தால் தெற்குதிசை மற்றவைகளைக் காட்டிலும் உயர்ந்த திசையாயிற்று. தென்னாடும் வடநாடும் தொழநின்ற திருவரங்கத்தில் கோயில் கொண்ட ஸ்ரீரங்கநாதன் தூங்கிக் கொண்டிருக்கிறானில்லை. தனது கடாக்ஷங்களை வில்லிபுத்தூரில் செல்லவிடுகிறான். ஸ்ரீவைஷ்ணவ குலத்தை ஸந்தோஷிக்கும்படி செய்ய அவதாரம் செய்தவள், பூமிப்பிராட்டியின் அவதாரமான ஸ்ரீஆண்டாள். கருணையைப் பார்த்தால் பெரியபிராட்டியார் என்றே சொல்லலாம். 'அவரைப் பிராயம்' தொடங்கியே தன்னைத் 'துவரைப்பிரானுக்கே' ஸமர்ப்பித்தவள். தனது இளமைப் பருவத்திலேயே வேதாந்தங்களுடைய ஸாரமான அர்த்தங்களை உள்ளே அமைத்து 143 பாடல்களை இயற்றியவள்.



உலகில் தாய்தான் குழந்தைகளுக்கு இன்னார் இன்ன உறவு என்று சொல்லிக் கொடுப்பாள். பேசத் தொடங்கின குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு இவர் அப்பா, அக்கா, அத்தை என்று விரலினால் சுட்டிக் காட்டிச் சொல்லி குழந்தை அறிந்து கொண்டு பின்பு அவர்களை அம்மா, அக்கா என்றெல்லாம் சொல்லும். நமக்கெல்லாம் தாய் ஸ்ரீ ஆண்டாள். அவள்தான் நமக்கும்

பெருமாளுக்குமுள்ள உறவைச் சொல்லிக் கொடுத்தாள். '*உன்றன்னோடு உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது*' என்று சொல்லிக் கொடுத்தாள். "மாதா, பிதா, ப்ராதா, நிவாஸ:, சரணம் ஸுஹ்ருத் ச நாராயண:" என்று உபநிஷத் கூறுகிறது. "தாயாய், தந்தையாய், மக்களாய், மற்றுமாய், முற்றுமாய், நீயாய், நீ நின்றவாறு" என்கிறார் நம்மாழ்வார். "அம்மானும் அம்மனையும் அடியேனுக்காகி நின்ற நன்மான ஒண்சுடரே" என்கிறார் திருமங்கையாழ்வார். "இடர்கடியும் மாதா பிதாவாக வைத்தேன் எனதுள்ளே" என்றும் சொன்னார் நம்மாழ்வார். உலகில் சிலர் விரும்பினால் உறவை ரத்து செய்து விடுகிறார்கள். நமக்கும் எம்பெருமானுக்குமுள்ள உறவை நாமும் பெருமாளும் சேர்ந்தால் ரத்து செய்ய முடியாது. ஒழிக்க முடியாது என்று சொல்லிக் கொடுத்தாள் ஸ்ரீஆண்டாள்.

எனக்கு எனது பூர்வாசிரமத்தில் நண்பன் பார்த்தசாரதி என்று ஒருவன் இருந்தான். அவன் விஷயமாக ஒரு ஸந்தர்ப்பம் ஞாபகம் வருகிறது. அதை எழுதுகிறேன். நான் தேரெழுந்தூர் ஆண்டவன் ஸந்நிதியில் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரயஸாரம் காலக்ஷேபம் செய்து வந்தேன். என்னோடு பார்த்தஸாரதி என்பவரும் கூட காலக்ஷேபம் செய்தார். ஒரு சமயம் அவன் சென்னை போக வேண்டியிருந்தது. ஆச்சார்யனிடம் தெண்டம் ஸமர்ப்பித்து ஒரு வாரம் சென்னைக்குப் போகவேண்டியிருக்கிறது. அடியேனுக்கு காலக்ஷேபம் விட்டுப் போய்விடும். ஒரு வாரம் விராமம் வேண்டும். அதுவரையில் கூடயிருக்கிறவர்களுக்கும் காலக்ஷேபத்தை நிறுத்தி வைக்க வேண்டுமென்றான்.

ஸ்ரீமத் ஆண்டவனும் அதை அங்கீகாரம் செய்தாகிவிட்டது. அவனும் ஊருக்குச் சென்றுவிட்டான். அது சமயம் அஷ்டசுலோகி காலக்ஷேபம் ஸாதித்தபடி. போன எனது நண்பர் 15 நாள் கழித்து வந்தார். ஒரு வாரம் சொல்லிவிட்டுப் பதினைந்து நாள் ஆகி விட்டதே! என்ன காரணம்? என்று ஸ்ரீமதாண்டவன் அவனைக் கேட்டாயிற்று. அவன் பதில் சொன்னான். எனக்கு சென்னையில் உறவினர்கள் அதிகம். ஒருவர் அகத்திற்குப் போய் மற்றொருவர் அகத்திற்கு போகாது போனால் கோபித்துக் கொள்வர். ஆகையால் ஒவ்வொரு வேளை ஒரு உறவாத்துக்குப் போய்விட்டு ஒருவரையும் விடாமல் பார்த்து விட்டு வந்தேன். நாள் ஆகிவிட்டது என்றான். உடனே ஸ்ரீமதாண்டவன், நல்லது! திருவல்லிக்கேணியில் பார்த்தஸாரதி ஸந்நிதிக்குப் போய்விட்டு வந்தாயா? என்று கேட்டபடி, அவன் அவகாசமில்லை! போகவில்லை! என்றான். உடனே ஆசார்யன், ஏனடா? எல்லா உறவினர்களையும் விடாமல் பார்த்து வந்தேன் என்று சொன்னாய். பார்த்தஸாரதி உறவில்லையா? என்று கேட்டாச்சு. அவன் ஸ்தம்பித்துப் போய்விட்டான். பெருமாள் உறவு என்று தெரியவில்லை என்றான். உடனே ஆசார்யன் அவனுக்குப் பெருமாள் உறவு என்பதை பலபடி உபதேசம் செய்தபடி. இந்த மாதிரி பெருமாள் நமக்கு உறவு என்பதை ஒருவரும் தெரிந்து கொள்ளவில்லை. இதை முதலில் காட்டிக் கொடுத்தவள் ஸ்ரீஆண்டாள்.




“உன்றன்னோடுற்றோமேயாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம” என்று அந்த உறவின் கார்யமான கைங்கர்யத்தையும் பிரார்த்திக்கையாலே கைங்கர்யம் புருஷார்த்தம் என்கிற விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தையும் காட்டித் தந்தாள். ஸர்வேஸ்வரன் பிதா - நாம் புத்ரன். அவன் சேஷீ - நாம் சேஷன். அவன் ஸ்வாமி - நாம் தாஸன், அவன் ரக்ஷகன் - நாம் ரக்ஷிக்கப்படுபவர், அவன் ஆத்மா - நாம் ஸரீரம். இப்படிப் பல உறவுகள் இருந்தபோதிலும் நாம் அடியோம் என்பதைத்தான் முக்யமாகக் கருதி அதன் கார்யமான கைங்கர்யத்திலே ஈடுபட வேண்டும். “தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே எனக்கே கண்ணனை யான் கொள் சிறப்பே” என்று நம்மாழ்வார் அடையவேண்டிய புருஷார்த்தத்தை நிர்ணயம் செய்தார். ஸ்ரீஆண்டாளும் அதையேதான் உபதேசித்தாள்.

ஒரு தேசத்தில் ஒரு பெரிய பணக்காரர் இருந்தார். அவருக்கு 6000 ஏக்கர் நிலம் இருந்தது. நெல் விளையும் பூமி. நல்ல என்றும் வற்றாத நீரையுடைய நதியின் பாய்ச்சல். குறைவில்லாமல் நெல் வந்து கொண்டிருந்தது. வீட்டுக்கு வேண்டியதை வைத்துக்கொண்டு பாக்கியை விற்று பங்களாக்கள், வாகனங்கள் முதலிய வசதியோடிருந்தான். அவனுக்கு நல்ல அழகுள்ள, புத்திமதியுடன் கூடிய ஸாமர்த்தியமான பெண். கணக்கில் நல்ல கெட்டிக்காரப் பெண். தகப்பனாரிடம் மிகவும் பரிவுள்ளவள். தகப்பனார் நெல் அறுவடை செய்வதற்குப் போகும்கால் கூடப் போவாள். நெல் எவ்வளவு ஒரு ஏக்கருக்குக் கிடைக்கிறது என்பதெல்லாம் தெரியும். சிறிது காலம் சென்றபின் தகப்பனார் அந்த பெண்ணுக்கு விவாஹம் பண்ண யத்னம் செய்தார். வரன் தேடினார். ஒரு பணக்கார பையன் கிடைத்தான். அவனுக்கு 10000 ஏக்கர் நிலம் இருப்பதாக தெரிந்தது. நல்ல வசதியுள்ள கௌரவமான குடும்பம். அந்த பையனை நிச்சயித்து விவாஹம் பண்ணிக் கொடுத்தார். விவாஹம் நன்கு நடந்து, பெண்ணும் புக்ககம் போய் நன்கு வாழ்ந்தாள். சிறிது காலம் சென்றபின், புக்ககத்தில் வருமானம், செலவு எல்லாம் தெரிந்து கொண்டாள். ஒருநாள் சமயம் பார்த்து அப்பெண் கணவனிடம் பேசினாள். நமக்கு 10000 ஏக்கரா நிலம் இருப்பதாக என் தகப்பனார் சொன்னார். என் பிறந்தகத்தில் இவ்வளவு நிலம் கிடையாது. 6000 ஏக்கராதான் நிலம். ஆனால் அங்கு எவ்வளவு நெல் வருகிறதோ அவ்வளவுதானே இங்கும் வருகிறது. என்ன காரணமோ தெரியவில்லை என்று கேட்டாள். அதற்கு கணவன் உனக்கு என்ன வேணுமோ தருகிறேன். நம் வீட்டில் எல்லாச் செலவிற்கும் போதுமானதாகக் கிடைக்கிறது. இதற்கு என்ன விசாரம் உனக்கு? என்று சொன்னான். உடனே அப்பெண் எனக்கு

ஒன்றும் குறைவில்லை. வரும்படி குறைவாகயிருக்கிறதே, இன்னும் அதிகமாக கிடைத்தால் தர்மங்கள் செய்யலாம். பகவத் பாகவத ஆராதனங்களுக்கு உதவும். இன்னும் ஏழைகளுக்கு உதவலாம் என்று கேட்டேன் என்றாள். உடனே கணவன் கவனிக்கிறேன் என்று சொல்லி, காலை எழுந்தவுடன் கார்யஸ்தர்களை கூப்பிட்டுக் கேட்டான். அவர்கள் உண்மைதான். சில நிலங்கள் நம் ஸ்வாதீனத்தில் இல்லை. பிறர் ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறார்கள். சில நிலங்களில் பயிரிடவில்லை. அதனால் குறைவாகதான் வருகிறது என்று சொன்னார்கள். இதனை அவன் மனைவியிடம் தெரிவித்தான். மனைவி அந்நிலங்களை ஸ்வாதீனப் படுத்துவதற்கும், தரிசு நிலங்களை பயிரிடுவதற்கும் பிரயத்னப்படும்படி சொன்னாள். அவனுக்கு அதில் ஊக்கம் ஏற்பட்டு வேண்டிய கார்யங்களைச் செய்து எல்லா நிலங்களையும் ஸ்வாதீனப்படுத்தி, பயிரிட்டதில் விசேஷ பலன் கிடைத்தது. முன்னிலும் அதிக தான தர்மங்களைச் செய்து புகழோடு வாழ்ந்தான்.

இம்மாதிரி ஸ்ரீஆண்டாளும் ஸர்வேச்வரனான எம்பெருமானிடம் பேசி நம்மை உய்விக்கப் பண்ணினாள். எங்ஙனே என்னில் ஸ்ரீ ஆண்டாள் தூங்கிக் கொண்டிருந்த கண்ணனான ஸர்வேச்வரனை எழுப்பினாள்.

இப்புவியிலுள்ள ஜீவர்களெல்லாம் நமக்கு சேஷ பூதர்கள்தானே? அவர்களை நாம் ஏன் விட்டிருக்க வேணும். ஸ்ரீவைகுண்டத்தில் எண்ணற்ற நித்யஸூரிகளும் முக்தர்களும் நமக்குக் கைங்கர்யம் பண்ணினாலும் அங்கு இவர்களும் வந்து கைங்கர்யம் செய்தால் சிரேயஸ்தானே! உபநிஷத்துகளில் எல்லா ஜீவன்களும் ஸர்வேச்வரனுடைய பிரயோஜநத்திற்காகவே இருக்கின்றன என்று சொல்லியிருக்கின்றனவே! ஜீவர்கள் பராதீனர்கள். பரார்த்தங்கள் ஸர்வேச்வரனுக்காகவே இருக்கின்றன!.

ஸம்ஸாரிகளும் நமக்கு ஸேஷபூதர்கள்தானே! அவர்களுக்கு சேஷத்வத்தை இனி உண்டு பண்ண வேண்டுமா? இயற்கையிலேயே நமக்கு ஏற்பட்டவர்கள்தானே! அவர்களை உபேக்ஷிப்பது ஏன் என்று சொல்லி தான் சூடிக் களைந்து கொடுத்த மாலைகளால் அவனை ஸ்வாதீனப்படுத்தி, அவனை நம்மையெல்லாம் கடாக்ஷிக்கச் செய்து, "ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேத் மதுஸூதந:" என்கிற கணக்கிலே நம்மை உஜ்ஜீவிக்கச் செய்தாள். தானும் திவ்யபிரபந்தங்களைச் செய்து ஜ்ஞானப் பால் ஊட்டினாள். ஜீவராசிகளுக்கு உதாஸீனராயிருந்த பெருமாளை எழுப்பி வேதாந்த விழுப்பொருளை உபதேசித்தாள். இப்படி அனாதிகாலமாக ஸம்ஸாரத்திலே கிடந்த ஸேதனர்களை பெருமாளை ஆஸ்ரயிக்கச் செய்து மோக்ஷனாந்தத்தை அடையச் செய்தாள். பெருமாளுக்கும் சுருதிப் பொருளைச் சொல்லி அவன் கருணை நம்மேல் ஏறிப் பாயும்படி செய்தாள். இத்தால் இவள் ஆச்சார்ய கோஷ்டியிலும் சேர்ந்தாள். ஆனது பற்றியே ஸ்ரீமத் ஆண்டவன் ஸம்ப்ரதாயத்தில் குருபரம்பராநுஸந்தான காலத்தில்

“ஸ்ரீமத்யை கோதாயை நம:” என்று அனுஸந்திக்கிறார்கள். ஆகவே ஆண்டாள் ஆச்சார்யஸ்தானத்திலும் புருஷகார ஸ்தானத்திலும் நிற்கிறாள்.

திருப்பாவை என்கிற முப்பது பாட்டுகளுள்ள பிரபந்தத்தில், அறிந்து கொள்ள வேண்டிய ஸகலார்த்தங்களையும் அருளிச் செய்துள்ளாள். ஸ்ரீமந் நாராயணனே அடையவேண்டிய பரம்பொருள். அவனே மோக்ஷத்தைக் கொடுப்பவன். பிரபன்னன் செய்ய வேண்டிய கார்யம், அப்பெருமான் அவனாகக் கொடுக்கும் க்ஷேமங்கள், அவனுடைய பர, வ்யூகம் முதலிய ஐந்து திருமேனிகள், பாகவத சேஷத்வம், பகவத் பக்தி, பாகவத பக்தி, மந்திர பக்தி, புருஷகார வைபவம், பிரபத்தியின் அங்கங்கள், சரணாகதி முதலிய ஸகலார்த்தங்களைத் திருப்பாவையில் ஸ்ரீஆண்டாள் நமக்குத் தெளிவாகக் காட்டிக் கொடுத்திருக்கிறாள்.

143 பாசுரங்களைக் கொண்ட நாச்சியார் திருமொழி, அத்புதமான பிரபந்தம். 14 பதிகங்கள் கொண்டது.

முதல் பதிகத்தில் ஸ்த்ரீபுருஷர்களை சேர்த்து வைக்கும் தெய்வமான மன்மதனைத் துதித்து வணங்கி தன்னை ஸர்வேச்வரனோடு சேர்த்து வைக்கும்படி வேண்டினாள்.

இரண்டில், கண்ணனைப் பிரிந்து தரிக்க முடியாமல் சிற்றிலழைத்துப் போதுபோக்கப்புக அக்கண்ணன் வந்து சிற்றிலைச் சிதைக்க எங்கள் சிற்றில் சிதையேலென்று ஆயர் சிறுமியர் மழலைச் சொல்லாகப் பேசினாள்.

மூன்றாம் பதிகத்தில் கோபிமார்களைப் போல் அநுகாரம் பண்ணி கோபிகள் நீராடும் போது வஸ்திரங்களை எடுத்துக் கொண்டு மரமேறியிருந்த கண்ணனை எங்கள் வஸ்திரங்களைக் கொடு என்று வேண்டினாள்.

நான்காம் பதிகத்தில், கூடலிழைத்தல் பேசப்படுகிறது. அதாவது மனக்கவலைப்படுபவர்கள் தங்கள் இஷ்டம் நிறைவேறுவதற்குக் குறி பார்ப்பது வழக்கம். வட்டமாக கோடுபோட்டு அதன் நடுவே பலசுழிகளைப் போடுவது, சுழிகளைப் பிறகு எண்ணுவது. இரட்டையாகயிருந்தால் தனது விருப்பம் நிறைவேறும். ஒற்றைப்படையாகயிருந்தால் தன் இஷ்டம் நிறைவேறாது. ஆண்டாள் இப்படிக் குறி பார்த்தாள். அதைக் கூறுவது இப்பதிகம்.

ஐந்தாம் பதிகத்தில் பகவானைப் பிரிந்து வருந்தும் ஆண்டாள், தான் வளர்த்த குயிலை எம்பெருமான் வரும்படி கூவும்படி வேண்டுகிறாள்.

ஆறாம் பதிகத்தில் ஸ்ரீஆண்டாள் கண்ணனை மணம் செய்து கொள்வது போல் தான் கனாவைச் சொல்லுகிறாள்.

ஏழாம் பதிகத்தில் பாஞ்சசன்னியத்தைப் பெருமானோடு சுற்றமாக்கல் பேசுகிறது. அதாவது ஸ்ரீஆண்டாள் எம்பெருமானுடைய திவ்யாயுதமான சங்கத்தைப் பார்த்து உன் செல்வம் சால அழகியது. நீ பெருமானைப் பிரிவதேயில்லை. எல்லாரும் அனுபவிக்க வேண்டிய பெருமானுடைய திருப்பவளத்தை நீ ஒருவனாக அநுபவிக்கிறாய் என்றாள்.

எட்டாம் பதிகத்தில், திருவேங்கடமுடையானுக்கு மேகங்களைத் தூதுவிடுதல்

ஒன்பதாம் பதிகத்தில், திருமாலிருஞ்சோலை அழகரைப் பாடுகிற படியைச் சொல்லுகிறது.

பத்தாம் பதிகத்தில் கண்ணன் நிறம் போன்ற நிறமுள்ள காந்தள் மலர்களையும், அதன் பவளவாய் போன்ற நிறமுள்ள பழங்களைக் கொண்ட கொடியையும், அவன் புன்முறுவலைப் போன்ற மலர்களையுடைய முல்லைக் கொடியையும், இப்படி பெருமானுடைய திவ்யாவயங்களை நினைவூட்டும் வஸ்துக்களை கூப்பிட்டு என்னை வருந்தச் செய்யாதீர்கள் என்று சொல்லி புலம்புகிறாள்.

பதினென்றாம் பதிகத்தில்தான் திருவரங்கனை ஆசைப்பட்டதைப் பேசுகிறாள்.



(கண்ணன் ராஸலீலை புரிந்த இடம்: ஸேவாகுன்ச், பிருந்தாவனம்)

பனிரெண்டாம் பதிகத்தில், உறவினர்களைப் பார்த்து கண்ணன் இருந்தவிடங்களில் என்னைக் கொண்டுபோய் சேருங்கள் என்கிறாள்.

பதிமூன்றாம் பதிகத்தில், தாய்மார்களை பார்த்து எனக்கு எம்பெருமானைப் பிரிந்து தனித்திருக்க முடியவில்லை. நீங்கள் எனக்கு உபதேசம் செய்யும் நிலை இப்போதில்லை. அவன் சாத்திக் கொண்ட பீதாம்பரத்தை என்மேல் வீசுங்கள். குடந்தைக் கிடந்தானுடைய திருத்துழாயை என் குழலில் சூட்டுங்கள். அவன் வனமாலையை கொணர்ந்து என்மேல் புரட்டுங்கள் என்று இவ்வாறு தனது பிரிவாற்றமையைச் சொல்லுகிறாள்.



பதினான்காம் பதிகத்தில், கண்ணன் ஆண்டாளுக்கு பிருந்தாவனத்தில் ஸேவை சாதிக்கின்றான். தனக்குக் காட்சி கொடுத்தமையைப் பலவாறு பேசி தலைக்கட்டினாள்.

(ராதாரமன் மந்திர், பிருந்தாவன்)

இப்படி 143 பாக்கள் கொண்ட பிரபந்தத்தை விரிவாக காலக்ஷேபமாகக் கேட்டால், நன்கு தெளிவான ஞானமுண்டாகும். பகவதநுபவம் கொழுந்து விட்டு வளரும். பெருந்தாளுடைய பிரானடிக் கீழ் பிரியாது வாழலாம்.